பக்கங்கள் 21+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 12 புதன்கிழமை 26.03.2025 | அதிர்வு 235

# தேசபந்துவின் பதவியை பறிக்கும் பிரேரணையை நிறைவேற்றியே தீருவோம்

## அநுர அரசு திட்டவட்டம்



“தேசபந்து தென்னக் கோனைப் பதவி நீக்குவ தற்கான யோசனை 05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





## யாழ். பல்கலை இணைந்த சுகாதார விஞ்ஞான பீட

# மாணவர்களின் போராட்டத்தை தடுத்து நிறுத்திய பொலிஸார்

## தேர்தல் சட்டத்தைக் காரணம் காட்டி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டமையால் அங்கு சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது.

வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு கோரி இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களினால் இன்று புதன்கிழமை காலை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து பேரணி ஆரம்பிக்கப்பட்டது. 03▶





# பேராசிரியரின் மனைவியும் உயிரிழப்பு!

## விபத்தில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்வு

மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் பாரவூர்தியுடன் வான் மோதிய விபத்தில் கடந்த 18 ஆம் திகதி 04▶

# யாழ். குடாநாட்டில் வெப்பநிலை உச்சம்




## நீராகாரங்களை அதிகமாக அருந்துமாறு அறிவுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் குடாநாட்டில் வெப்பநிலை அதிகரித்துள்ளமையால் உடல் வெப்பத்தைத் தணிக்கக் கூடிய நீராகாரங்களை அதிகமாக அருந்துமாறு யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜா அறிவுறுத்தியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.





# இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக இலங்கை - இந்திய மீனவர் வவுனியாவில் பேச்சுவார்த்தை

(கி.வசந்தன்)

இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக இலங்கை – இந்திய மீனவர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை வவுனியாவில் இன்று நடைபெற்றது.

வவுனியா, ஹொரவப்பொத் தானை வீதியில் உள்ள அருந் ததி தனியார் விருந்தினர் விடுதி யில் இந்தப் பேச்சுவார்த்தை இடம் பெற்றது.

இரு நாட்டு மீனவர் பிரச்சனைக் குச் சுமுகமான தீர்வு எட்டப்படுவது தொடர்பாக முதல் கட்டமாக இலங்கை – இந்திய மீனவர்களிடையே மீனவர் களின் சொந்த முயற்சியில் பேச்சு வார்த்தை நடத்துவது குறித்து கடந்த வாரம் முடிவு செய்யப்பட்டது. இதன்படி இந்தப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகி யுள்ளது.

இதன்போது, இந்திய மீனவ பிரதி நிதிகளை இலங்கை மீனவ பிரதிநிதி கள் பொன்னாடை போர்த்தி வரவேற்ற துடன், இந்திய மீனவர்களும் இலங்கை மீனவர்களுக்கு நினைவுப் பரிசில்களை வழங்கி பேச்சுவார்த்தையை ஆரம்பித் துள்ளனர்.

எல்லை தாண்டி மீன் பிடித்தல், தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துதல், இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்படு கின்றமை, இரு நாட்டு மீனவ உறவு தொடர்பில் இதன்போது பேசப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த ஜேசுராஜா, ஆல் வின், சகாயம், ஜஸ்டின், ஜெர்மனி யஸ் ஆகியோர் கொண்ட 5 பேர் கொண்ட குழுவினரும், இலங்கை மீனவர்கள் சார்பில் சுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), மரியராசா (முல்லைத் தீவு), ஆலம் (மன்னார்), பிரான்சிஸ் (கிளிநொச்சி), அந்தோனிப்பிள்ளை (கிளி நொச்சி), சங்கர் (மன்னார்), இராமச்சந் திரன் (யாழ்ப்பாணம்), அன்னராசா (யாழ்ப்பாணம்), வர்ண குலசிங்கம் (யாழ்பாணம்) உள்ளிட்ட 12 பேர் கொண்ட குழுவினரும் இந்தப் பேச்சு வார்த்தையில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, தமிழக மீனவர்கள் முதல்கட்டமாக ஒரு மாத காலம் இலங்கைக் கடற்பரப்புக்குள் இழுவை மடி மீன்பிடியை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மீனவர்களுக்கு இடையேயான இந்த முதல் கட்ட பேச்சுவார்த்தை நடை பெற்றுள்ளது.











# வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றில் 'சங்கு' கூட்டணி வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ். மாநகர சபை உள்ளிட்ட 9 உள்ளூராட்சி சபைகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபையிலும் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

மேற்படி கூட்டணியினர் இந்த வழக்கை இன்று தாக்கல் செய்துள்ளனர்.

# வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களைப் பார்வையிட்ட இந்திய மீனவர் சங்கத்தினர்




(கி.வசந்தன்)

வவுனியா விளக்கமறியல சிறைச்சாலையில தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை இந்திய மீனவர் சங்கத்தின் பிரதிநிதிகள் பார்வையிட்டுக் கலந்துரையாடினர்.

வவுனியாவுக்கு வருகை தந்த இந்தியாவின் இராமேஸ்வரம் மாவட்டத்தின் இந்திய விசைப்படகு மீனவர் சங்கத்தின் தலைவர் பி.ஜேசுராஜா, இராமேஸ்வரம் பாரம்பரிய விசைப்படகு மீனவர் சங்கத்தைச் சேர்ந்த ஆல்வின் பெர்னாண்டோ, மண்டபம் விசைப்படகு மீனவர் சங்கத்தைச் சேர்ந்த இருதயராஜ் ஜஸ்ரின், தங்கச்சிமடம் விசைப்படகு மீனவர் சங்கத்தைச் சேர்ந்த ஜெருசிமான்ஸ், பாம்பன் விசைப்படகு மீனவர் சங்கத்தைச் சேர்ந்த ராஜப்பன் சகாயம் ஆகியோர் இன்று பிற்பகல் வவுனியா சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டனர்.

எல்லை தாண்டியும், சட்டவிரோத முறைகளைப் பயன்படுத்தியும் மீன் பிடித்ததாக இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 40 வரையான இந்திய மீனவர்களை அவர்கள் பார்வையிட்டதுடன், அவர்களது தற்போதைய நிலைமை தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டனர்.

வவுனியா சிறைச்சாலை அதிகாரிகள் குறித்த மீனவர்களைப் பார்வையிட இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கு விசேட ஏற்பாடுகளையும் செய்து கொடுத்திருந்தனர்.





# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மாணவர்களின்...**

பேரணி ஆரம்பிக்கப்பட்டு சிறிது நேரத்தில் மருத்துவபீடத்துக்கு முன்பாகப் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு, பேரணியாகச் சென்ற மாணவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலமாக இந்தக் காலப் பகுதி உள்ளமையால் பேரணிகள் , ஊர்வலங்கள் நடத்த தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கூறியே மாணவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

"நாம் அரசியல் ஊர்வலம் செல்லவில்லை. வேலைவாய்ப்பு கோரியே போராட்டம் நடத்துக்கின்றோம்." – என்று மாணவர்கள் கூறிய போதிலும், பொலிஸார் பேரணியைத் தொடர்ந்து செல்ல விடாது தடுத்து நிறுத்தினர்.

அதனால் அந்த இடத்தில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்ட நிலையில், மாணவர்கள் பேரணியைக் கைவிட்டு, பல்கலைக்கழகத்தினுள் திரும்பினர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**பேராசிரியரின்...**

உயிரிழந்த களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி என்.டி.ஜி. கயந்த குணேந்திரவின் மனைவியும் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் இன்று உயிரிழந்தார்.

இதன்படி, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

கடந்த 18 ஆம் திகதி களனி பல்கலைக்கழக தத்துவ ஆய்வுகள் துறையின் உளவியல் பிரிவின் தலைவராகப் பணியாற்றிய 46 வயதுடைய பேராசிரியர் ஒருவர் தனது மனைவி, 3 பிள்ளைகள் மற்றும் மனைவியின் தாய் மற்றும் சகோதரனுடன் யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா வந்து விட்டு வானில் மீண்டும் வீடு நோக்கிப் பயணித்தனர். இதன்போது குருநாகல் பகுதியிலிருந்து மீரிகம நோக்கிப் பயணித்த இந்த வானானது வீதியில் பயணித்த பாரவூர்தி ஒன்றின் பின்புறத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தின்போது, வானில் பயணித்த களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும், அவரது மனைவியும், 3 பிள்ளைகளும் மனைவியின் தாய் மற்றும் சகோதரனும் படுகாயமடைந்த நிலையில் மீரிகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் உயிரிழந்தார்.

இதனையடுத்து விபத்தில் படுகாயமடைந்த களனி பல்கலைக்கழக பேராசிரியரின் மனைவியும், 3 பிள்ளைகளும், மனைவியின் தாய் மற்றும் சகோதரனும் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

பின்னர் களனி பல்கலைக்கழக பேராசிரியரின் 3 பிள்ளைகளும் மனைவியின் தாயும் சிகிச்சை பெற்றுவிட்டு வீடு திரும்பிய நிலையில் மனைவியின் சகோதரன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலைக்யில் சிகிச்சை பெற்ற வந்த களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியரின் மனைவியும் இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**தேசப்பந்துவின்...**

எந்த வகையிலும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையாது. ஏப்ரல் 8 அல்லது 9ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வுகளின் போது குறித்த யோசனையை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.”

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகப் பணியாற்றுவதற்கு நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2002ஆம் ஆண்டு 5ஆம் இலக்க அதிகாரிகளைப் பதவி நீக்கும் சட்ட ஏற்பாடுகளுக்கமைய சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபரைப் பதவி நீக்கும் வழிமுறைகளையே அரசு பின்பற்றுகின்றது. அதற்கமையவே பொலிஸ்மா அதிபரைப் பதவி நீக்குவதற்கான யோசனையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

75 இற்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டு சபாநாயகரிடம் யோசனையைச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கமைய 115 நாடாளுமன்ற உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்ட யோசனை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக இந்த யோசனை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்வாங்கப்படும்.

அதனையடுத்து 5 நாட்களின் பின்னர் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்கப்படும். அதற்கமைய அடுத்த நாடாளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ள தினத்தை அண்மித்த நாளில் அதாவது ஏப்ரல் 8 அல்லது 9ஆம் திகதி தேசபந்து தென்னக்கோனைப் பதவி நீக்கும் யோசனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்.

நாடாளுமன்ற அமர்வுக்கு வருகை தராத உறுப்பினர்களும் உள்ளடங்களாக 113 பேரது ஆதரவுடன் இந்த யோசனை நிறைவேற்றப்பட வேண்டும். அந்த வகையில் 113 வாக்குகளைப் பெற்றுக்கொள்வது அரசுக்கு எந்த வகையிலும் சிக்கலாகாது. எனவே. இதனை ஏப்ரல் 8 அல்லது 9ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும்.

இவ்வாறு இந்த யோசனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையடுத்து மூவரடங்கிய ஒழுக்காற்று விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்படும்.

பிரதம நீதியரசரால் நியமிக்கப்படும் உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையின் கீழ் பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்படும் நிர்வாக அறிவுடைய அதிகாரி ஆகியோர் நியமிக்கப்படுவர்.

இந்த விசாரணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பதவி நீக்கும் யோசனையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து 113 அல்லது அதற்கும் மேற்பட்ட உறுப்பினர்களின் ஆதரவுடன் அதனை நிறைவேற்ற முடியும். இந்த நடைமுறையையே அரசு பின்பற்றி வருகின்றது. நாடாளுமன்றத்தின் இந்த நடைமுறை எந்த வகையிலும் நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமையாது.” – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இது தேவையா?

'பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்' என்பார்கள். அந்த மாதிரி தொடர்ந்து நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறார் பணியில் இருந்து இடைநிறுத் தப்பட்டு, இப்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்.

முறையற்ற வழி மூலம் - அரசியல் குளறுபடித்தனம் மூலம் - இந்தப் பத விக்கு அவர் வந்ததனால் அந்த முறைமை யிலேயே பதவியிலிருந்து அகற்றப்படும் துர்பாக்கியம் அவருக்கு நேர்ந்திருக்கின்றது.

அவர் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட முறைமை தொடர்பில் உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவின் அடிப்படையில் அவர் இப்போது உயர் நீதிமன்றத்தினால் பணியில் இருந்து இடை நிறுத்தப்பட்டிருக்கிறார்.

அவர் பதவியில் இருந்த போது இடம் பெற்ற உயிரிழப்பை ஏற்படுத்திய ஒரு சம்பவத்திற்காக இப்போது விளக்கமறிய லில் இருக்கின்றார்.

ஜனாதிபதியினால் பிரேரிக்கப்பட்டு பரிந்துரைக்கப்படும் ஒருவரின் பெயரை அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரித்தால் அவர் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப் பட முடியும்.

தேசபந்து தென்னக்கோனின் பெயரை அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பரிந்துரைத்த போது அதனை முத லில் அரசமைப்பு கவுன்ஸில் நிராகரித்தது.

இரண்டாவது தடவை அவரது பெயர் பரிந்துரைக்கப்பட்ட சமயம் அரசமைப்புக் கவுன்ஸில் அதை நிராகரித்து எடுத்த முடிவை பிழையாகக் கணக்குக் காட்டி ('கணக்கு விட்டு') சபாநாயகர் அந்த பரிந்து ரையை அரசமைப்பு கவுன்ஸில் அங்கீகரித் துள்ளது என்று தவறான கடிதத்தை அனுப் பியமையினால், அதன் அடிப்படையில் விரைந்து - உடனடியாக சில மணி நேரத்துக் குள் - அவருக்குப் பொலிஸ்மா அதிபர் பதவி நியமனத்தை வழங்கி வைத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

சபாநாயகர் என்ற முறையில் தாம் அரசமைப்பு கவுன்ஸில் கூட்டங்களுக்கு தலைமை வகிப்பதால் அந்தத் தலைமை பொறுப்பில் தாம் எடுக்கும் முடிவுகளை நீதிமன்றங்களோ, பிற தரப்புகளோ தலை யிட்டு மாற்ற முடியாது என்ற தவறான கற்பிதத்தில் அப்போதைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அத்தகைய நடவடிக்கையை எடுத்திருந்தார்.

அரசமைப்புக் கவுன்ஸில் வாக்களிப்பு தொடர்பான எண்ணிக்கையை - அது தொடர்பான அட்சர கணிதத்தை - தம் இஷ்டப்படி மாற்றிக் குளறுபடி பண்ணி னார் சபாநாயகர் என்பது வெளிப்படை யானது.

ஆக, அப்போதைய சபாநாயகரின் குளறுபடித்தனத்தைப் பயன்படுத்தி பொலிமா அதிபர் பதவியை பெற்றுக் கொண்டார் தேசபந்து தென்னக்கோன்.

ஆயினும், சபாநாயகரின் அந்த முடிவை சட்டப் பரிசீலனைக்கு உட்படுத்த இணங்கிய உயர் நீதிமன்றம், வழக்கு விசாரணை முடியும் வரை தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக பதவி வகிக்க இடைக்காலத் தடை விதித் திருக்கிறது.

அதற்கிடையில் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட் டுள்ள தேசபந்து தென்னக்கோனை அப்பதவிலிருந்து நிரந்தரமாக விலக்கு வதற்கான நாடாளுமன்றப் பிரேரணை ஒன்று இப்போது அரசு தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

தேசபந்து தென்னக்கோனின் தெரிவும் நியமனமும் முற்றிலும் தவறானவை என்று ஆரம்பம் முதலில் ஒரேடியாக எதிர்த்து வரும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தாங்களும் தங்களது கட்சியினரும் தேசபந்து தென்னக்கோ னைப் பதவி விலக்கும் பிரேரணையை முழுமையாக ஆதரிப்பார்கள் என்று தெரிவித்திருக்கின்றார்.

ஆக, 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 200க்கும் குறையாத உறுப்பினர்களின் ஆதரவு தேசபந்து தென்னக்கோனைப் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்கும் பிரேரணைக்கு கிட்டும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

முறையற்ற விதத்தில் தாம் சுவீகரித்துக் கொண்ட பதவியை வகிக்கவும் முடியா மல், விட்டு விலகவும் முடியாமல் தத்தளிக் கும் தேசபந்து தென்னக்கோன் இப்போது அப்பதவியில் இருந்து அகௌரவமான நிலையில் - முறையில்- வெளியேறும் அல்லது வெளியேற்றப்படும் சூழல் உருவாகி இருப்பது அவரைப் பொறுத் தவரை பெரும் துரதிஷ்டம்தான்...!

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல்!

### செய்யவுள்ளோம் என்கிறார் ரவூப் ஹக்கீம்



(கே. எ. ஹமீட் )

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்நீதிமன்றில் வழக்கல் தாக்கல் செய்யவுள்ளது என்று அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவிக்கையில்,

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக பல சபைகளுக்கு அரசியல் கட்சிகளாலும்,சுயேட்சைக் குழுக்களாலும் தாக்கல் செய்யப்பட்ட கணிசமான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை இவ் வார இறுதிக்குள் விசாரித்து தீர்ப்பு வழங்கும் சாத்தியம் இருக்கிறது.

அநேகமாக, அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பபட்ட உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எழுந்துள்ள சில சட்ட சிக்கல்கள் தொடர்பிலேயே பல கட்சிகளினாலும், சுயேட்சை குழுக்களாலும் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் இம்முறை நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் கட்சியின் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் மனுதாரராகவும் அவ்வாறே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்’க்கும் ஐக்கிய தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையில் அந்தக் கட்சிகள் சேர்ந்து போட்டியிடவுள்ள சில சபைகளுக்கான நிராகரிக்கப்பட்டுள்ள வேட்பு மனுக்களைப் பொறுத்த வரை பிரஸ்தாப கூட்டமைப்பின் செயலாளர் எம். நயீமுல்லாஹ் மனுதாரராகவும் இருக்கும் நிலையில், அவற்றுக்காகவும் நான் வாதாடவுள்ளேன்.- என்றார்.

### காரைதீவு பிரதேச சபைக்கு

# 11 உறுப்பினர்கள் தெரிவுக்கு 112 வேட்பாளர்கள் போட்டி!

### ஈபிடிபி , பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்புமனுக்கள் நிராகரிப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் காரைதீவு பிரதேச சபைக்கு 11 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 112 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர் .

உள்ளூராட்சித் தேர்தலுக்காக காரைதீவு பிரதேச சபையின் சார்பில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் 10 வேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன, அவற்றில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் இரண்டு வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. ஆகவே எட்டு வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதில் 07 கட்சிகளும் ஒரு சுயேட்சை குழுவும் களமிறங்குகின்றன.

இலங்கை தமிழரசுக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி , ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஆகிய 07 கட்சிகளும் , முன்னாள் உப தவிசாளர் ஏ.எம்.ஜாகீர் தலைமையிலான 01 சுயேட்சை குழுவும் போட்டியிடுகின்றன. 11 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 07 வட்டாரங்களில் சுமார் 15 ஆயிரம் மக்கள் வாக்களிக்க இருக்கின்றனர்.

காரைதீவு பிரதேச சபை ஆள்புல எல்லைக்குள் காரைதீவில் 04 வட்டாரங்களும், மாளிகைக்காட்டில் 02 வட்டாரங்களும், மாவடிப்பள்ளியில் 01 வட்டாரமும் உள்ளன.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





# நாட்டுக்குள் தேவையான மாற்றங்களை உள்ளூராட்சி தேர்தலில் காண்பியுங்கள்

### *எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ*

ஆளும் மக்கள் விடுதலை முன்னணியினர் பல தசாப்தங்களாக சமூகத்தில் வெறுப்பை பரப்பி வந்தனர். வெறுப்பைப் பரப்பி, அந்த வெறுப்பின் மூலம் வெற்றிகளைத் தமதாக்கிக் கொண்டனர். உலகில் எந்த நாடும் வெறுப்பைப் பரப்பி அபிவிருத்தியை முன்னேற்றத்தை காண வில்லை.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு 60 மாத கால ஜனாதிபதி ஆணையுள்ளது. இதில் பத்தில் ஒரு பங்கே முடிந்துள்ளது. இன்னும் கூட வெறுப்பை பரப்பி அரசியல் வெற்றிகளைப் பெற முயல்கின்றனர்.

இந்த நிலையில் நாட்டுக்குள் மாற்றம் தேவை. இந்த மாற்றத்தை இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக ஜனநாயக ரீதியாக காண்பியுங்கள்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரமதாஸ தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று (25) இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளதாவது,

வெறுப்பை பரப்புவதை விட சேவைகள் நடக்க வேண்டும் என்பதையே நாட்டு மக்கள் விரும்புகின்றனர். வேலையில்லா பட்டதாரிகளுக்கு 35,000 வேலைகள் வழங்கப்படும் என்று வாக்குறுதி வழங்கினர். ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பை பெற்றுத் தருவோம் என வாக்குறுதி வழங்கினர். வெறுப்பையும் பகைமையையும் பரப்புவதன் மூலம் நாட்டில் நம்பிக்கையும் ஒற்றுமையுமே சீர்குலையும். எனவே வீராப்பு பேசுவதை நிறுத்திவிட்டு பணியைத் தொடங்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன.


மணிக்கணக்கில் பேசிவிட்டு அந்த இந்த பட்டியல்களை முன்வைப்பதை விட, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் தங்களுக்கு இருப்பதால் சட்ட ரீதியாக அவற்றுக்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கிறேன். அரசியல் படம் காட்டாமல் சட்டத்தை முறையாக பயன்படுத்துங்கள். அரசாங்கம் என்பது பெரும் பொறிமுறையாகும். இந்த பொறிமுறையில் பொறுப்புக்கூறல் இருக்க வேண்டும். அரசு பொறுப்பை விதைக்கவோ அல்லது வேலை செய்ய முடியாமல் போனதற்கான காரணங்களை கூறவோ கூடாது. மக்களுக்குச் சேவை செய்யவே ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அரசு என்ற வகையில் பொது நிர்வாகத்தைத் திறம்பட முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஆனால் 323 கொள்கலன்கள் பரிசோதனைகள் இன்றி விடுவிக்கப்பட்டன. 323 கொள்கலன்களுக்கும் என்ன ஆனது என்பது தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. போதைப் பொருள், மதுபானம், தங்கம், பாவனைக்கு உதவாத உணவுகள் இதில் இருந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. திருட்டு வழியில் கடத்தப்பட்ட பொருள்களை வைத்துக் கொண்டு கடத்தல்காரர்களே மறுமலர்ச்சியடைவர். இவற்றில் போதைப்பொருள் இருந்தால் போதைப்பொருள் வியாபாரிகளே மறுமலர்ச்சியடைவர் .

அவ்வாறே, தற்போது காட்டுச் சட்டம் கோலோச்சி கொள்ளையர்கள், போதைப்பொருள் வியாபாரிகள், கடத்தல்காரர்கள், கொலைகாரார்களால் சமூகம் ஆட்கொள்ளப்பட்டுள்ளது. சட்டம் சரியாக அமுல்படுத்தப்படவில்லை. புலனாய்வு மற்றும் தேசிய பாதுகாப்பு குறித்து வகுப்புகள் எடுக்கிறோம் எம்மிடம் வாருங்கள் என வீராப்பு பேசினர். இருந்தாலும், பொலிஸ் மா அதிபர் தானாக ஆஜராகும் வரை அவர்களால் கைது செய்ய முடியாது போனது. நீதிமன்றத்திற்குள்ளேயே கொலையை திட்டமிட்ட பெண் கூட தலைமறைவாக உள்ளார். இன்றுவரை கண்டுபிடிக்கவில்லை. நாடு முழுவதும் கொலைகள் நடக்கின்றன. எனவே நாட்டுக்குள் மாற்றம் தேவை. இந்த மாற்றத்தை இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக ஜனநாயக ரீதியாக காண்பியுங்கள்.– என்றார்.






Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Haram NEK 318
Haram NEK 473
Haram NEK 477
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555





# கிழக்கு முதலமைச்சு செயலக ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வுகள்

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண முதலமைச்சு செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரட்னசேகர கலந்து கொண்டார்.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.










# மட்டக்களப்பு மாவட்ட செயலக இப்தார்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் நடத்திய இப்தார் நோன்பு துறக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை (25) மாலை பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டீனா முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஸலவாத் ஓதப்பட்டது. அத்தோடு நோன்புப் பெருநாள் தொடர்பான சிறப்புச் சொற்பொழிவை கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார சிரேஷ்ட விரிவுரையாளர் அஸ்சைக் எஸ்.எல்.எம்.நஸ்மில் ஆற்றினார்.

இந்த நிலையில் 6.15 மணிக்கு நோன்பு துறந்து உணவு பரிமாறப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர்களான சுதர்சினி ஸ்ரீகாந்த் மற்றும் நவரூபரஞ்சினி முகுந்தன், மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.சுபியான் உட்பட மாவட்ட செயலக உயரதிகாரிகள், ஊழியர்கள்,வர்த்தக சங்கப் பிரதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மன்னார் முசலியில் இப்தார் நிகழ்வு!

(மன்னார் எஸ்.ஆர். லெம்பேட்)

இரு மீனவ சமூகங்களுக்கிடையில் மத ஒற்றுமையை மேம்படுத்தும் வகையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் ஏற்பாடு செய்த நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மாலை முசலி பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள கொண்டச்சி பாடசாலையில் இடம் பெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் பணியாளர்கள் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

இதன் போது முசலி பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் இளம் மீனவர்களும் தமிழ் இளம் மீனவர்களும் இந்த இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இரு மீனவ சமூகங்களுக்கு இடையில் உள்ள ஒற்றுமை,சகோதரத்துவத்தை மேம்படுத்தும் வகையிலும்,அவர்களுக்கிடையில் புரிந்துணர்வு ஏற்படும் வகையிலும் குறித்த இப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.











# புதிய அலை கலை வட்ட இப்தார் நோன்பு விருந்து

கலை, இலக்கிய, ஊடகங்களை ஒன்றிணைத்து கடந்த 44 ஆண்டுகளாக இயங்கி வரும் புதிய அலை கலை வட்டத்தின் இப்தார் நோன்பு விருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை செட்டியார் தெரு மிஹிரி விருந்தினர் மண்டபத்தில் தலைவர் ராதா மேத்தா தலைமையில் நடைபெற்றது.





# பாடசாலை வலுவூட்டல் செயற்றிட்டம் அக்கரைப்பற்றில் அங்குரார்ப்பணம்

(றிஸ்வான் சாலிஹூ)

அக்கரைப்பற்று பைத்துல்மால் – ஸகாத் நிதியத்தின் ஏற்பாட்டில், பைத்துல் ஹிக்மா, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா அக்கரைப்பற்று கிளை மற்றும் அக்கரைப்பற்று கல்வி வலயம் இணைந்து அக்கரைப்பற்றில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள "பாடசாலை வலுவூட்டல் செயற்றிட்டம்" அங்குரப்பண நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை (25) அக்கரைப்பற்று ஸகாத் நிதியத்தின் உபதலைவர் அஷ்ஷேக் எஸ்.எம். அபுல் ஹாஸீம் தலைமையில் அக்கரைப்பற்று சேர் றாசீக் பரீட் வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக்கல்வி பணிப்பாளர் அஷ்ஷேக் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் கலந்து கொண்டார். விசேட அதிதியாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஏ.எச்.பௌஸ் அவர்களும், ஸகாத் நிதியத்தின் நிர்வாக உறுப்பினர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவர்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள், உலமாக்கள், சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு விசேட உரையாற்றிய வலயக் கல்வி பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் தனதுரையில்,

இந்தச் செயற்றிட்டத்துக்காக உத்தேசிக்கப்பட்ட முதலாவது பாடசாலையாக அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் காணப்படும் மிகவும் பின்தங்கிய பாடசாலையான அக்/ சேர் றாஸிக் பரீட் வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 60 வருடங்களை கொண்ட இப்பாடசாலை வரலாற்றில் இப்பாடசாலையில் கற்றலுக்குத் தேவையான போதிய அடிப்படை வசதிகள் இல்லாமை, இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் வறுமை போன்ற காரணிகளாலும் மற்றும் பொருத்தமற்ற பாடசாலை சமூகச் சூழல் நிலவுவதன் காரணமாகவும் மாணவர்களின் கல்வி மற்றும் நடத்தைகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இவற்றை தீர்த்து வைக்கும் முகமாக மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் ஒன்றிணைந்து இந்தப் பிராந்திய பொது மக்களின் நிதியுதவியுடன் முக்கியமான தேவைப்பாடுகளை இனம்கண்டு அதனை நிவர்த்தி செய்து வைக்கும் வகையில் இப்பாரியதொரு பணியை இப்பிராந்திய மாணவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கையை மையமாக கொண்டு செயற்படுத்தப்படுவதை நாம் அவதானிக்க முடிகின்றது. அது மாத்திரமன்றி எமது வலயக்கல்வி அலுவலகம் செய்ய வேண்டிய இப்பணியை இவர்கள் செய்வதை எம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

எனவே, ஒரு சமூகத்தில் நல்ல மாற்றம், சமூக எழுச்சி மற்றும் சிறந்த சமூக கட்டமைப்பு உட்பட சமூக சீர்கேடு இல்லாமல் வரவேண்டும் என்றிருந்தால் அவைகள் அனைத்தும் பாடசாலையில் இருந்து தான் ஆரம்பிக்க வேண்டும். இதற்கு பாடசாலையை சகல துறைகளிலும் வளமுள்ள பாடசாலையாக மாற்ற வேண்டியது எமது ஒவ்வொருவரதும் சமூகப் பொறுப்பாகும் என்று தெரிவித்தார்.

இச்செயற்திட்டம் தொடர்பான விரிவான விளக்கத்தையும் அதனை மேற்கொண்டு செய்வதற்கான திட்டமிடலையும் ஸகாத் நிதியத்தின் செயலாளர் எம்.ஐ.சாஹீர் தெளிவுபடுத்தினார்.

# சிவாகம கலாநிதி சிவஸ்ரீ தானு மகாதேவக்குருக்களின் மறைவு சைவ உலகுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு!

## அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் இரங்கல்

சிவாச்சாரியப் பெருமகனாருக்கு உரிய அத்தனை பண்பு நலன்களும் கொண்டு திகழ்ந்த உயர் பேராளன் வேத சிவாகமப் பேராசான் சிவஸ்ரீ தானு மகாதேவக்குருக்கள் திருவோணத் துடன் கூடிய ஏகாதசி திதியில் நேற்று (25) செவ்வாய்க்கிழமை சிவபதம டைந்திருக்கிறார்.

அவரது மறைவு சைவ உலகுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவ்வாறு அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர் பண்டிதர் செஞ்சொல்வேந்தர் சைவப்புலவர் செ.த.குமரன் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபர் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ தானு மஹாதேவ குருக்கள் ஐயா கற்பதிலும் கற்பிப்பதிலும் தேடுவதிலும் பிறரை தட்டிக் கொடுத்து ஊக்குவிப்பதிலும் உயர் பண்பாளனாக விளங்கியவர்.

தனக்கென்று ஒரு குரு பரம்பரையை உருவாக்கியுள்ளார். எப்போதும் தம்



மாணவனின் உயர்வில் அக்கறை உள்ள ஒரு ஆச்சார்யராக விளங்கியவர்.

சிவபூமியாகிய சைவத்தமிழ் மண் ணில் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக வேத சிவாகம குருகுலத்தை அவர் நடத்தியிருக்கிறார்.

சைவஉலகம் போற்றிய ஐயாவின் பணியின் பயன் அனைவரும் அறிவர்.

ஐயாவின் புலமைக்குச் சான்றாக உயர் கௌரவமாக இந்தியாவின் தமிழகத்து தருமை ஆதீனம், சிவ புரம் பாடசாலை போன்ற ஆன்மீகம் சார் நிறுவனங்களின் கௌரவிப்பு கிடைத்திருக்கின்றமை குறிப்படத்தக்கது. காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச் சாரியார் அவருக்கான கௌரவிப்பில் இணைய வழியில் நேரே இணைந்து ஆசிவழங்கி வழங்கிக் கௌரவித்தமை உயர் சிறப்புக்கு உரியது.

குருகுல மரபில் ஒரு பெரும் மாணவ பரம்பரையை உருவாக்கி சைவப்பணியாற்றி மறைந்திருக்கிறார்.

வேதஆகம சாஸ்திர சம்ஸ்கிருத புலமையாளாக விளங்கியவர். அத்துடன் கலைகளில் ஆர்வமும் இரச னையும் கலைஞர்களை ஊக்குவித்து ஆசீர்வதிப்பதிலும் உயர் பெருமகனாக விளங்கினார்.

ஐயாவின் மறைவு பேரிழப்பாகும். ஐயாவின் ஆத்மா எப்போதும் எம்மை ஆசீர்வதிக்கட்டும்.

ஐயாவின் ஆத்மா பார்வதி சமேத பரமேஸ்வரப்பெருமானின் திரு வடிகளில் இளைப்பாற பிரார்த்திக்கி றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக் கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.– என்றுள்ளது.



# மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்துக்கு முன்னாள் எம்.பி. ஹரீஸ்!

(சர்ஜுன் லாபீர்)

கல்முனை பிராந்தியத்தில் விளை யாட்டு வீரர்களின் நீண்ட கால தேவையாக இருந்த மின்னொளி விளை யாட்டு மைதானம் ஒன்று இல்லாத குறையை நிவர்த்தி செய்யும் முகமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான சட்டத் தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நிதி ஒதுக்கீடு செய்தியரந்தார்.

சுமார் ஒரு கோடி அறுபது லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதா னத்துக்கு நிரந்தரமாக மின்னொளி பொருத்தப்பட்டுள்ளது.

அதன் பூர்வாங்க வேலைகளை பார்வையிடும் முகமாக நேற்று (25) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் கண்காணிப்பு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இவ் விஜயத்தின் போது மைதானத் தில் மேற்கொண்டு செய்ய வேண்டிய வேலைகள் சம்மந்தமாகவும் ஏனைய தேவைகள் சம்மந்தமாகவும் கலந்து ரையாடியிருந்தார்.

இந்த மைதானமானது அம்பாறை மாவட்டத்தில் ஒரேயொரு மின்னொளி மைதானமாக காணப்படுகின்றது.

இந்த விஜயத்தின் போது கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம் முஸ்தபா, மற்றும் எம்.சமீம், மருதம் விளையாட்டுக்கழக செயலாளர் அசன் மனாஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா உட்பட கல்முனை மாநகர சபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கல்முனை பிரதேச செயலகம் மற்றும் மாநகர சபை ஆகியன இணைந்து இந்த வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து நிறைவேற்றின. இந்தச் செயற்றிட்டத்தால் அம்பாறை மாவட்டத்தில் உள்ள உதைப்பந்தாட்ட வீரர்கள் மற்றும் மென்பந்துக் கிரிக்கெட் வீரர்கள் அதிகம் பயனடைவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# இல்மனைற் அகழ்வு நிறுத்தப்படும்வரை ஜனாதிபதிக்கு தபாலட்டை அனுப்ப முடிவு!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற இல்மனைட் அகழ்வு செயற்பாட்டை உடனடியாக நிறுத்தக் கோரி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்குத் தபாலட்டை அனுப்பும் வேலைத்திட்டம் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேச மக்கள், பெண்கள் அமைப்புகள், மீன வர்கள் உட்பட இளைஞர்கள், மாணவர்கள் அனைவரும் இணைந்து இந்த தபாலட்டை அனுப்பும் வேலைத் திட்டத்தில் பங்கு பற்றினர்.

"ஜனாதிபதிக்கு ஓர் மடல்" எனும் செயற்றிட்டத்தைச் சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் நிறுவனம் ஆரம்பித்து வைத்தது.

இல்மனைற் அகழும் பணி நிறுத்தப்படும்வரை ஜனாதிபதிக்கு தபாலட்டை தொடர்ந்து அனுப்பி வைக்கப்படும் என்று நிறுவன இணைப்பாளர் காத்த வராயன் காந்தன் தெரிவித்தார்.





# டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை ஐ.எஸ்.ஓ.9001 சான்றிதழ் பெற்றுச் சாதனை!





(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் ஐ.எஸ்.ஓ.9001 சான்றிதழை பெற்ற ஒரேயொரு தனியார் வைத்தியசாலையாக கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை தெரிவாகி சாதனை படைத்துள்ளது.

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்திய சாலையின் தலைவர் மருத்துவர் றிஷான் ஜெமீல் தலைமையிலான நிர்வாகத்தின் கீழ் இங்குள்ள நவீன ஆய்வுகூடம் திகழ்கிறது. அங்கு சர்வதேச தரத்திலான சுமார் 1000 பரிசோதனைகள் சேவையாக வழங்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் ஐஎஸ்ஓ 9001 சான்றிதழ் பெற்ற, நவீன ஆய்வுக்கூடமுள்ள ஒரேயொரு தனியார் வைத்தியசாலையாக டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அதனை மக்களுக்கு அறிவித்து பிரகடனப்படுத்தும் நிகழ்வுகடந்த ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலையின் மருத்துவ பணிப்பாளர் மருத்துவர் எம்.ஜே.சட்.எம்.ஜலால்டீன் தலைமையில் நடைபெற்றது .

அது தொடர்பான காணொளி காண்பிக்கப்பட்டது. டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் நவீன ஆய்வுகூடப் பணிப்பாளர் கலாநிதி ஆகிப் அதற்கான பூரண விளக்கத்தை வழங்கினார்.

இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அஷ்ரப் தாஹிர் மற்றும் ஏ. ஆதம்பாவா ஆகியோர் உள்ளிட்ட முக்கிய பல பிரமுகர்கள் கலந்து கொண்டு ஆய்வுக்கூடத்தை பார்வையிட்டனர் . ஆய்வுகூட உத்தியோகத்தர் நிவே விளக்கமளித்தார்.

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் கிளைகள் சாய்ந்தமருது மற்றும் சம்மாந்துறை ஆகிய பகுதிகளிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.






# உலக காசநோய் தினத்தினை முன்னிட்டு சம்மாந்துறையில் விழிப்பூட்டல் கருத்தரங்கு

(பாறுக் ஷிஹான்)

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு காசநோய் பரவுதல் பற்றியும், அதைத் தடுப்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கல்முனை பிராந்திய மார்பு சிகிச்சை நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்பூட்டல் கருத்தரங்கு நிகழ்வு திங்கட்கிழமை (24) சம்மாந்துறையில் அமைந்துள்ள பிராந்திய மார்பு சிகிச்சை நிலையத்தில் இடம்பெற்றது.

“ஆம்! எம்மால் காசநோயை முடிவுக்கு கொண்டு வர முடியும்” அர்ப்பணிப்பு, முதலீடு, வழங்கல் எனும் எனும் தொனிப்பொருளில் பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.அப்துல் கபூர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன்போது சம்மாந்துறை பிரதேச செயலாளர் எல்.எம். எம்.ஹனீபா, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஜீ.சுகுணன், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் பீ.பிரபாசங்கர், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித், பிராந்திய பிரிவு தலைவர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், மாவட்ட வைத்திய அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கருத்தரங்கு நிகழ்வின் போது காசநோய் தொடர்பாகவும் அந்த நோய்க்கான அறிகுறிகள், அந்நோயிலிருந்து பாதுகாப்பு பெறுதல், சமூகத்தில் காசநோயை கட்டுப்படுத்த முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பிராந்திய பணிப்பாளர், பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி ஆகியோர் விளக்கமளித்தனர்.



அதனைத் தொடர்ந்து “ஆம்! எம்மால் காசநோயை முடிவுக்கு கொண்டு வர முடியும்” எனும் தொனிப்பொருளுக்கு நானும் ஆதரவை வழங்குகின்றேன் எனும் கருப்பொருளில் கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் வெளிச் சுவரில் கையெழுத்து இடும் பலகை திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்ட சகலரும் கையொப்பமிட்டனர்.

உலக காசநோய் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 24 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.






# கல்முனையில் காசநோய் விழிப்புணர்வு நடைபவனி!

(வி.ரி. சகாதேவராஜா)

உலக காச நோய் தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்திய சாலை, கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து விழிப்புணர்வு நடைபவனி ஒன்றை மேற்கொண்டன.

இந்த நிகழ்வானது கல்முனை ஆதார வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி குணசிங்கம் சுகுணன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் போது கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ந. ரமேஷ் கலந்து கொண்டார்.

விழிப்புணர்வு நடைபவனியானது கல்முனை ஆதார வைத்தியசாலை முன்றலில் இருந்து ஆரம்பித்து பிரதான வீதி ஊடாக கல்முனை பொதுச் சந்தையை அடைந்து அங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம் பெற்றன.

மீண்டும் பஸ் தரிப்பிடம், மட்டக்களப்பு பிரதான வீதியினூடாக வைத்திய சாலையை வந்தடைந்தது. வைத்திய சாலையில் பாதுகாப்பாக சளி சேகரிப்பதற்கான நிலையம் பயனாளிகளுக் காகத் திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை ஆதரவைத்திய சாலையின் வெளி நோயாளர் பிரிவில் காச நோய்க்கான சளி பரிசோதனை 2 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது என்பது சிறப்பம்சமாகும்.

இந்த நிகழ்வின் போது வைத்திய சாலையின் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், நிர்வாக கிளையினர், சுகாதார உதவியாளர்கள் மற்றும் சுத்திகரிப்பு ஊழியர்கள் கலந்து கொண்டனர்.







# உயர்தர விஞ்ஞான பீட மாணவி பிரதமர் ஹரிணியுடன் சந்திப்பு!





(அபு அலா )

கல்முனை மஹ்மூத் பெண்கள் பாடசாலையில் உயர்தர விஞ்ஞான பீடத்தில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றுவரும் பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸ தீனின் 2 ஆவது புதல்வி இஸ்ஸதீன் மரிஹா ஆலியா, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுடனான தொலைக்காட்சி நேர்காணல் நிகழ்வொன்றில் சந்தித்துள்ளார்.

கிழக்கு மாகாணம் சார்பாகப் பங்குபற்றிய பின்வரும் பிரதமரிடம் கேள்விகளைக் கேட்டார்.

டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு மாணவர் களை மேம்படுத்த நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

பல்லின மக்களைக் கொண்ட எமது நாட்டில் மாணவர் களுக்கு இடையிலான தொடர்பாடல் மேம்படுத்துவதன் மூலம் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை மேம்படுத்த முடியுமானால் உங்கள் அரசு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை என்ன?

முஸ்லிம் பெண் மாணவிகள் சாதாரண தரம் பயின்றதற்குப் பின்னர் தனது கல்வியைத் தொடர தனியான பெண்கள் பாடசாலையை விரும்புகின்றனர். இதற்காக உங்களது அரசு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை என்ன?போன்ற கேள்விகளைத் கேட்டார். இதனையடுத்து பதில் வழங்கிய பிரதமர், தன்னால் முடியுமான உதவிகளைச் செய்வார் என்றும் தனது அரசு முடியுமான உதவிகளைச் செய்யும் என்றும் இந்த முறை 21 பில்லியன் ரூபா நிதி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.





# திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக் கூடம் விரைவில் இயங்கும்!

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் ஆதார வைத்திய சாலையில் இதுவரை காலமும் இயங்காதிருந்த சத்திர சிகிச்சைக் கூடம் வெகு விரைவில் இயங்க உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 140 வருட காலம் பழமை வாய்ந்த திருக்கோவில் ஆதார வைத் தியசாலையில் சத்திர சிகிச்சை கூடம் அமைக்கப்பட்டும் இதுவரையும் எந்த ஒரு சத்திர சிகிச்சையும் இடம்பெற வில்லை.

அதற்கான உபகரணங்கள் தருவிக் கப்பட்ட போதிலும் அதில் சில தேவை நிமித்தம் நிதிப் பற்றாக்குறை காரணமாக இயங்காமல் இருந்துள் ளது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.ஏ.மசூத் எடுத்துக் கொண்ட முயற்சி காரண மாக, இயன்மருத்துவர் பிசியோதெர பிஸ்ட் கணபதிப்பிள்ளை ஹரன் ராஜ் ஏற்பாட்டில் பிரபல சமூக செயற் பாட்டாளரும் கல்முனை ரோட்டரி கழகத் தின் முன்னாள் தலைவருமான பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசி குமார் உதவ முன்வந்தார்.

அதற்கு ஆக 8 லட்சம் ரூபா தேவை என்று வைத்தியசாலை சார்பில் கோரப்பட்டது. இந்த நிலையில் தொழி லதிபர் சசிகுமார் 20 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

சத்திர சிகிச்சை கூட இறுதிக் கட்ட தயார்படுத்தலுக்கும், இயன்மருத்து வப்பிரிவு அபிவிருத்திக்குமாக இந்த நிதி கையளிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமல்ல தொழிலதிபர் சசிகுமார் நேரடியாகவைத்தியசாலைக்கு சென்று முற்றுமுழுதாகப் பார்வையிட்ட தோடு குறைபாடுகளையும் கேட்டறிந் தார்.

சமூக செயற்பாட்டாளர் சசிகுமார் அவரது சொந்த நிதியில் இருந்து இந்த வருடத்துக்குள் 10மில்லியன் ரூபாவைத் தருவதாகக் கூறி அதன் முதல் கட்டமாக 20 லட்சம் ரூபாவுக்கான காசோலையை வழங்கி உடனடியாக சத்திர சிகிச்சை கூடத்துக்குத் தேவை யானதை கொள்வனவு செய்து அதை இயங்கு நிலைக்கு கொண்டு வருவருமாறு வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் மசூத்திடம் கூறினார்.

அதன் பின்னர் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் மசூத்தின் அழைப்பின் பேரில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் மற்றும் மயக்க மருந் தியல் நிபுணர் ஆகியோர் வைத்தி யசாலையின் சத்திர சிகிச்சை கூடத்தைப் பார்வையிட்டு சத்திர சிகிச்சைகளை எவ்வாறு ஒழுங்கமைப்பது பற்றியும் சத்திர சிகிச்சை கூட தேவைகள் பற்றி யும் கலந்துரையாடினர்.

விரைவில் திருக்கோவில் ஆதார வைத்திய சாலையில் சத்திரசிகிச்சை கூடம் இயங்குவதற்கு தேவையான அனைத்து விடயங்களும் தற்போது துரித கதியில் இடம் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 133ஆவது ஜனன தினம் நாளை!



உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 133 ஆவது ஆண்டு ஜனன தினம் நாளை (27) வியாழக்கிழமை ஆகும்.

அடிகளார் 1892.03.27ஆம் திகதி இவ் அவனியில் அவதரித்து 1947.07.19ஆம் திகதி மகா சமாதி அடைந்தார். இன்றுடன் அவர் இவ் வையகத்தில் அவதரித்து 133 வருடங்களாகின்றன. அவர் மகாசமாதியடைந்து 77 வருடங்களாகின்றன. ஆக வாழ்ந்த காலம் 55வருடங்கள்.

அடிகளார் ஆற்றிய அளப்பெரிய பணிகளை இன்றும் தமிழ்கூறு நல்லுலகம் நினைவில் கொண்டிருக்கிறது.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் சிறந்து விளங்கிய காரணத்தால் முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்பட்டவர் சுவாமி விபுலாநந்தர்.

அவர் பல்துறை சார்ந்த பேரறிஞர். ஆசிரியராக, பண்டிதராக, விஞ்ஞானப் பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக்கழகங்களில் தமிழ்த் துறைப் பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக, மொழி பெயர்ப்பாளராக, முத்தமிழ் வித்தகராக விளங்கியவர் விபுலானந்தர். சமூகத் துறவியாக வாழ்ந்து செய்த தொண்டுகளும் தமிழுக்காற்றிய சேவைகளும் அவரை என்றும் நினைவு கூரச் செய்வனவாகும்.

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் இந்தியாவில் இராமகிருஷ்ண மிஷனின் “இராமகிருஷ்ண விஜயம்” என்று தமிழ் சஞ்சிகைக்கும், “பிரபுத்த பாரத”, “வேதாந்த கேசரி” என்ற ஆங்கில சஞ்சிகைக்கும் பிரதம ஆசிரியராக 1924 களில் பணியாற்றி இருந்தார். பின்னர் 1926 களில் கொழும்பில் இருந்து வெளிவந்த “விவேகானந்தன்” என்ற இதழின் ஆசிரியராக பணியாற்றினார்.

அதாகப்பட்டது இலங்கையின் முதலாவது தமிழ் பிரதம ஆசிரியராக இலங்கையரான தமிழ் இந்து துறவி சுவாமி விபுலானந்த அடிகளார் மிளிர்கின்றார் என்றால் அது மிகைப்பட்ட கூற்றல்ல.

தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் ‘யாழ்நூல்’ என்னும் பொக்கிசத்தைத் தரணிக்குத் தந்த சுவாமி விபுலானந்தர் பாரதியை மகாகவியாக படித்த மக்களிடையே உலவ விட்டவர் என்பது பலருக்குத் தெரியாத விடயம்.

சுவாமி விபுலானந்த அடிகள் மக்கள் எல்லோரையும் சமமாக மதித்தார். கல்வி எல்லோருக்கும் பொதுவானது என்று நினைத்தார். தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களுக்கும் கல்வி கிடைப்பதற்கு வழிசமைத்தார்.

ஆங்கிலக் கல்வியை இவர் முதலில் கல்முனையிலுள்ள மெதடிஸ்ற் கல்லூரியிலும் பின்னர் மட்டக்களப்பிலுள்ள மைக்கேல் கல்லூரியிலும் கற்றார். இவர் 16 ஆவது வயதிலேயே கேம்பிரிட்ஜ் பரீட்சையில் சித்தியெய்தினார். 1916இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்விலும் வெற்றி பெற்று ‘இலங்கையின் முதலாவது மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்’ என்னும் பெருமையையும் பெற்றார். 1919 இல் லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய பி.எஸ்.சி. தேர்விலும் சித்தியடைந்தார்.

கொழும்பு அரசினர் தொழிநுட்பக் கல்லூரியில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றினார். மயில்வாகனனாரின் விரிவுரைகள் மாணவர் மத்தியில் பெரும் சிறப்பைத் தேடிக் கொடுத்தன. அதனால் 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக விரும்பி அழைத்தனர். அதனை பெருவிருப்புடன் ஏற்றுக் கொண்டார்.

மயில்வாகனனாரின் மொழிப்புலமையையும் ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி முகாமையாளரும் திருப்புகழ் சிவப்பிரகாசம், சிவஞான சித்தியார் என்பவற்றுக்கு உரை எழுதியவருமான வழக்கறிஞர் திருவிளங்கத்தாரின் வேண்டுகோளுக்கு இணங்கி மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் 1925 ஆம் ஆண்டில் இருந்து முகாமையாளராகக் கடமையாற்றிய சுவாமி விபுலானந்தர் 1928 இல் அதிபர் பதவியையும் ஏற்றுக் கொண்டார்.

1924 இல் சென்னை சென்ற மயில்வாகனனார் இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து ‘பிரபோத சைதன்யர்’ என்னும் பெயர் பெற்றார். அதே ஆண்டு சித்திரைப் பௌர்ணமியில் துறவறம் மேற்கொண்டு சுவாமி சிவானந்தரால் ‘சுவாமி விபுலானந்தர்’ என்னும் நாமம் சூட்டப் பெற்றார். கல்லடி உப்போடையில் விபுலானந்தர் தாம் அமைத்த பாடசாலைக்கு சிவானந்த வித்தியாலயம் என நாமம் சூட்டியது தமது குருவின் ஞாபகார்த்தமாகவே.

1925 இல் இலங்கை திரும்பிய அடிகளார் கல்லடி

தொடர்ச்சி▼

# சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 133ஆவது ஜனன தினம் நாளை!

**தொடர்ச்சி▲**

உப்போடையில் சிவானந்தா வித்தியாலயமும் காரைதீவில் சாரதா மகளிர் கல்லூரியும் மற்றும் ஆதரவற்றோர் மாணவர் மாணவியர் இல்லங்களும் நிறுவி அளப்பெரிய கல்வித் தொண்டு செய்தார். பின்பு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தையும் திருகோணமலை இந்துக் கல்லூரியையும் இராமகிருஷ்ண சங்கத்தோடு இணைத்ததோடு நில்லாது மலையகத்திலும் பாடசாலைகள் அமைத்து சகலருக்கும் சிறந்த கல்வித் தொண்டாற்றினார். மேலும் இராமகிருஷ்ணமிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை ஒருங்கமைத்தார்.

1931 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும்,1943 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் பணி புரிந்தார். அத்தனை சிறப்போடு மொழியியல் விஞ்ஞானியாக, அறிவியல் கலைஞராக, ஆத்மீக ஞானியா, ஆற்றல் மிகு பேராசிரியராக, இயற்றமிழ் வல்லுனராக, இசைத்தமிழ் ஆராய்ச்சியாளராகப் பல பணிகள் புரிந்தார்.

1943 ஆம் ஆண்டில் இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கிய போது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராகப் பலரின் வேண்டுகோளுக்கிணங்கப் பணிபுரிய இணங்கினார். தமிழ் ஆய்வுத் துறையில் எவ்வழியில் செல்ல வேண்டுமென்ற திட்டங்களை சுவாமி விபுலானந்தரே வகுத்தார்.

யாழ்நூல், மதங்கசூளாமணி, கணேச தோத்திரப் பஞ்சகம், குமர வேணவ மணிமாலை, நடராஜ வடிவம் என்பன அடிகளாரின் பிரதான நூல்களாகக் காணப்படுகின்றன. மேலும் இலக்கியம், இசை,சமயம், மொழியியல், கல்வி, அறிவியல் சம்பந்தமாக எண்ணிறைந்த கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டு தமிழுக்கும் கல்விக்கும் தொண்டாற்றியுள்ளார்.

மேலும் விவேகானந்த ஞானதீபம், சம்பாசனைகள் (1924), கருமயோகம் (1934), ஞான யோகம் (1934), நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை (1941), விவேகானந்தரின் பிரசங்கம் (1934), அறிவியல் சம்பந்தமான எந்திரவியல் (1933), கலைச்சொல்லாக்க மாநாட்டுத் தலைமையுரை (1936) கலைச் சொற்கள் வேதிநூல் (1938), மின்சார சாத்தி வரலாறு, விஞ்ஞான தீபம் (1922), விஞ்ஞான தீபம்– மொழிபெயர்ப்பு முறை (1922) போன்ற நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

அக்காலத்தில் தமிழகத்தில் எண்ணற்ற தமிழறிஞர்கள் இருந்தும் சங்கத் தமிழில் சிறந்தவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சாமிநாதையர் மற்றும் இலங்கையைச் சேர்ந்த விபுலானந்தர் மட்டுமே என்னும் புகழாரம் அடிகளாருக்கு மட்டுமல்ல இலங்கைத் தமிழருக்கும் பெருமை தேடித் தந்தது.

அப்படி ஈழம் முதல் பணி இமயம்வரை கொடி கட்டிய இசைத்தமிழனான அடிகளாரின் 133 ஆவது ஜனனதினவிழா உலகின் எட்டுத் திக்கிலும் புகழ் பரப்ப பரவலாக கொண்டாடப்படவேண்டும் என்பதே எமது வேணவா.

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா.**
**முன்னாள் தலைவர்,**
**ஆலோசகர்,**
**சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றம்,**
**காரைதீவு**





# ஆஸ்திரேலியா - இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவி வவுனியா மாணவருக்கும்

ஆஸ்திரேலியா – இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவி வவுனியா மாவட்ட தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது

ஆஸ்திரேலியாவில் இருந்து கடந்த 37 வருடங்களாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் அனுசரணையுடன் புலமைப்பரிசில் உதவியை பெற்றுவரும் மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு இவ்வாண்டும் வழங்கப்பட்டது.

கடந்த வாரங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட மாணவர்களுக்கு யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக நிதிக்கொடுப்பனவு வழங்கப்பட்டது.

அண்மையில் வவுனியா மாவட்ட மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு




நிகழ்வு, இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் வவுனியா தொடர்பாளர் அமைப்பான நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் தலைவர் த. கணேஷ் தலைமையில், குறிப்பிட்ட பணிமனையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளில் மாணவர்களின் தாய்மாரும் கலந்துகொண்டனர்.

ஆஸ்திரேலியாவில் 1988 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இலங்கை மாணவர் கல்வி நிதியம், ஆரம்ப காலங்களில், இலங்கையில் நீடித்த போரால், தந்தையை, குடும்பத்தின் மூல உழைப்பாழியை இழந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

போர் முடிவுக்கு வந்தபின்னர், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களையும் இந்த புலமைப்பரிசில் திட்டத்தில் இணைத்துக் கொண்டு உதவி வருகிறது.

உதவிபெற்ற மாணவர்களும், அவர்களின் தாய்மாரும், கல்வி நிதியத்திற்கும், இந்நிதியம் ஊடாக உதவி வரும் ஆஸ்திரேலியா வாழ் அன்பர்களுக்கும் தங்கள் நன்றியை தெரிவித்தனர்.





# சூடானின் மத வழிபாட்டு தலத்தை குறிவைத்து துணை இராணுவப்படை தாக்குதல்: ஐவர் பலி

சூடானின் தலைநகர் கார்டூமில் உள்ள மத வழிபாட்டு தலத்தை குறிவைத்து துணை இராணுவப்படையினர் பீரங்கி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

தலைநகர் கார்டூமினை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர இராணுவம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த நிலையில் துணை இராணுவப்படையினர் இந்த தாக்குதலை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒஸ்கார் விருது பெற்ற இயக்குனர் இஸ்ரேலியப் படையால் சிறைபிடிப்பு

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே மீண்டும் போர் தீவிரமடைந்துள்ள நிலையில், ஒஸ்கர் விருது வென்ற இயக்குனரை இஸ்ரேல் சிறைபிடித்துள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

ஒஸ்கார் விருது பெற்ற பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹம்தான் பல்லால் என்பவரே இவ்வாறு சிறைபிடிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல் - பாலஸ்தீன போர் நிலைமையை மையப்படுத்தி 'நோ அதர் லேண்ட்' என்ற ஆவணப்படத்தை இயக்கியவர் இயக்குனர் ஹம்தான் பல்லால்.

இவர் காசாவின் மேற்கு கரையில் வசித்து வந்த நிலையில் அப்பகுதிக்குள் உள்நுழைந்த இஸ்ரேலியர்களால் தாக்கப்பட்டுள்ளார்.



இதனையடுத்து இஸ்ரேலிய இராணுவம் அவரை சிறைபிடித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிறைபிடிக்கப்பட்ட ஹம்தான் பல்லால் தற்போது காசாவின் மேற்குக் கரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.





# காசா மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல்; 7 குழந்தைகள் உட்பட 23 பேர் உயிரிழப்பு

காசா மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில், 7 குழந்தைகள் உட்பட 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

எட்டாவது நாளாக நேற்று இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பல்மைரா நகருக்கு அருகிலுள்ள இரண்டு சிரியா விமானப்படை தளங்கள் மீது குறித்த தாக்குதல் நடத்தப்பட்டது. இதுவரையில், காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சுமார் 50 ஆயிரத்து 82 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், 1 லட்சத்து 13 ஆயிரத்து 408 பேர் காயமடைந்துள்ளனர் என காசாவின் சுகாதார அமைச்சு அண்மையில் தெரிவித்திருந்தது.

இடிபாடுகளுக்குள் சிக்குண்டு ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர் என அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# கச்சதீவை மீட்குமாறு வலியுறுத்தி தாக்கல் செய்த வழக்கு ஒத்திவைப்பு

கச்சதீவை மீட்குமாறு வலியுறுத்தி இந்திய உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர் வரும் செப்டம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

5 வருடங்களின் பின்னர் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கச்சதீவை மீட்குமாறு கோரி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் பொதுச் செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான ஜெயலலிதா ஜெயராம் மற்றும் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினரான ஏ.கே.செல்வராஜ் ஆகியோர் தாக்கல் செய்த மனு 5 வருடங்களின் பின்னர் இந்திய உச்ச நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்திய தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா தலைமையில் இது தொடர்பிலான மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி பி.வில்சன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைவர் முத்துவேல் கருணாநிதியின் சார்பில் இந்த விடயம் தொடர்பில் மற்றுமொரு மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.



மனுதாரர் தற்போது உயிருடன் இல்லை என்பதால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர் டி. ஆர்.பாலுவை மனுதாரராக இணைத்துக்கொள்ள வேண்டும் என சட்டத்தரணி கோரிக்கை விடுத்ததுடன் நீதிமன்றம் அதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வழக்கு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# மழைக்கால கூட்டத்தொடரில் புதிய வருமான வரி மசோதா

## மக்களவையில் நிர்மலா சீதாராமன்



புதிய வருமான வரி மசோதா வரும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நிதி மசோதா 2025 மீதான விவாதத்துக்கு நேற்று பதில் அளித்து பேசும் போது நிர்மலா சீதாராமன் மேலும் தெரிவிக்கையில்,

“பெப்ரவரி 13 ஆம் திகதி மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வருமான வரி மசோதா தற்போது தேர்வுக்குழுவினால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இக்குழு அடுத்த கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பு தனது அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப் பட்டுள்ளது.

அதற்கு பின்பு அது (புதிய வருமான வரி மசோதா) மழைக்காலக் கூட்டத் தொடரின் போது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.” என்று தெரிவித்தார்.

மழைக்காலக் கூட்டத்தொடர் வழக்கமாக ஜூலை மாதம் தொடங்கி ஓகஸ்ட் வரை நடைபெறும்.

எளிமைப்படுத்தப்பட்ட வருமான வரி மசோதா, 1961ஆம் ஆண்டு வருமான வரி சட்டத்தின் அளவில் பாதியாக இருக்கிறது. மேலும் சட்டச் சிக்கல்கள் மற்றும் புதிய புதிய விளக்கங்களை குறைப்பதன் மூலம் வரி செலுத்துவதற்கான உறுதிப்பாட்டை அடைய முயல்கிறது என்று முன்பு வருமானவரித்துறை இதுகுறித்து விளக்கம் அளித்திருந்தது.

# டில்லியில் அமித் ஷா உடன் எடப்பாடி பழனிசாமி சந்திப்பு

டில்லி சென்றுள்ள தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை நேற்று சந்தித்தார். இது தமிழக அரசியலில் முக்கிய நிகழ்வாக அமைந்துள்ளது.

தமிழக சட்டப்பேரவை வரவு செலவு திட்ட கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், தமிழக எதிர்க்கட்சித் தலைவரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திடீரென நேற்று காலை டில்லி புறப்பட்டு சென்றார். இரண்டு நாள்கள் பயணமாக அவரது டில்லி பயணம் திட்டமிடப்பட்டுள்ளது. டில்லியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அ.தி.மு.க. அலுவலகத்தை பார்க்க வந்திருப்பதாக பத்திரிகையாளர்களிடம் எடப்பாடி பழனிசாமி கூறியிருந்தார்.

இந்த நிலையில் டில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை எடப்பாடி பழனிசாமி சந்தித்துள்ளார். டில்லியில் அமித் ஷாவின் இல்லத்தில் இந்த



சந்திப்பு நடைபெற்றது. அடுத்த ஆண்டு தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. கூட்டணி அமைக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது. இந்த நிலையில் அமித் ஷா மற்றும் எடப்பாடி பழனிசாமி சந்திப்பு இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

கனடா முரசு

புதன்கிழமை 26/03/2025

## ஹாமில்டனில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலி

கனடாவின் ஹாமில்டனில் வாகனங்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 55 வயதான சாரதியொருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து

02▶



# கனடாவின் தேர்தலில் சீனா, இந்தியா தலையீடு

## உளவு அமைப்பு குற்றச்சாட்டு

அடுத்த மாதம் நடைபெற உள்ள கனடாவின் நாடாளுமன்ற தேர்தலில் சீனா, இந்தியா, ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் தலையீடு இருக்கலாம் என சி.எஸ்.ஐ.எஸ். எனப்படும் அந்த நாட்டின் புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனி நாடு வேண்டும் எனக் கோரி காலிஸ்தான் உள்ளிட்ட சில பிரிவினைவாத இயக்கங்கள் வெளிநாடுகளில் செயல்பட்டு வருகின்றன. இந்த சூழலில் கனடா நாட்டில் வசித்து வந்த பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கடந்த ஆண்டு ஜூன் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார். இதில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியிருந்தார்.

02▶

# இலங்கை அதிகாரிகளிற்கு எதிராக பிரிட்டன் விதித்துள்ள தடைகளை வரவேற்கின்றோம்

## கனடாவின் நீதியமைசர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு



இலங்கை அதிகாரிகளிற்கு எதிராக பிரிட்டன் விதித்துள்ள தடைகளை கனடாவின் நீதியமைசர் ஹரி ஆனந்தசங்கரி வரவேற்றுள்ளார்.

ஹரி ஆனந்தசங்கரின் உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இலங்கை அதிகாரிகளிற்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதித்துள்ளதை நான் வரவேற்கின்றேன் .

இலங்கையில் பொறுப்புக்கூறலை நோக்கிய மற்றுமொரு முக்கியமான நடவடிக்கை இது.

2023 இல் கனடா , மகிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக விதித்த தடைகளை தொடர்ந்து பிரிட்டனும் தடைகளை விதித்துள்ளது.

இலங்கையில் தண்டனையின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் கலாச்சாரத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்கும், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் கனடா தொடர்ந்து பாடுபடும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# போலியான விசாக்களைப் பயன்படுத்தி கனடா செல்ல முயன்ற 11 பேர் கைது




போலி கனேடிய விசாக்களைப் பயன்படுத்தி கனடாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற 11 பேரும் அவர்களுக்கு உதவிய தரகர் ஒருவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கனடாவுக்கு தப்பிச் செல்ல முயன்றவேளை கைதான 11 பேரும் கொழும்பு, களுத்துறை, பதுளை மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 35 முதல் 40 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

இந்த சந்தேக நபர்களில் அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் மற்றும் அண்மையில் வெளிநாடு சென்றுவிட்டு மீண்டும் நாடு திரும்பியவர்களும் காணப்படுகின்றனர் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் ஸ்ரீலங்கா ஏர் லைன்ஸ் விமான சேவையின் யு.எல் - 225 விமானத்தில் டுபாய்க்குச் சென்று, பின்னர் அங்கிருந்து கனடாவுக்குத் தப்பிச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபர்கள் சோதனை நடவடிக்கைகளுக்காக தங்களது ஆவணங்களை விமான நிலைய அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளனர்.

அந்த ஆவணங்கள் குறித்து சந்தேகமடைந்த விமான நிலைய அதிகாரிகள், அவற்றை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

பின்னர், திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சந்தேக நபர்களின் கனடா விசாக்கள் போலியாக தயாரிக்கப்பட்டவை என்பது தெரியவந்துள்ளது.

கைதான 11 சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவர்களுடன் விமான நிலையத்துக்குச் சென்றிருந்த தரகர் ஒருவரும் விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட தரகரை விசாரணைக்கு உட்படுத்தியபோது மற்றுமொரு தரகரின் உதவியுடன் தலா 45 லட்சம் ரூபா அடிப்படையில் இந்த போலி கனேடிய விசாக்கள் தயாரிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, தரகர் உட்பட கைது செய்யப்பட்ட 12 பேரும் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலைய பொலிஸ் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## கனடாவின் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதை இந்தியா மறுத்தது. தொடர்ந்து இருதரப்பு நாடுகளுக்கு இடையிலான உறவு விரிசல் அடைந்தது. இந்நிலையில், தேர்தலில் தலையிடலாம் என்ற குற்றச்சாட்டு பாய்ந்துள்ளது.

"ஜனநாயக முறைப்படி நடைபெறும் கனடா நாட்டு தேர்தலில் ஏஐ டூல்களை சீனா பயன்படுத்த வாய்ப்புள்ளது. இதே போல கனடாவில் வசிக்கும் பல்வேறு சமூகங்கள் மற்றும் நாட்டின் ஜனநாயக செயல்முறைகளில் தலையிடும் நோக்கமும் அதற்கான திறனையும் இந்திய அரசாங்கம் கொண்டுள்ளது என்பதை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம்" என சி.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் துணை இயக்குநர் வனேசா லாயிட் கூறியுள்ளார்.

இதற்கு இந்தியா மற்றும் சீனா தரப்பில் இருந்து இன்னும் பதில் எதுவும் தரப்படவில்லை.

அமெரிக்காவின் வரி விதிப்பு அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு சவால்களை கனடா எதிர்கொண்டுள்ள நிலையில் அடுத்த மாதம் 28ஆம் திகதி அங்கு தேர்தல் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.





## ஹாமில்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

Highway 5 - Rock Chapel Road மற்றும் Millgrove Side Road இடையே, Dundas Street East அருகே இடம்பெற்றுள்ளதாக ஒன்டாரியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் வெளியிட்ட தகவலின்படி, பிரான்ட்ஃபோர்டைச் சேர்ந்த 55 வயது சாரதி ஒருவர் மேற்கே சென்று கொண்டிருந்த ஒரு லொறியை செலுத்திக் கொண்டிருந்தார்.

அப்போது, கிழக்கே சென்று கொண்டிருந்த, மணல் ஏற்றி வந்த பெரிய டிரெய்லர் மீது அந்த லொறி மோதியுள்ளது.

இந்த நேருக்கு நேர் மோதி விபத்தில், லொறியின் சாரதி வெளியே எறியப்பட்டு, சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்,

விபத்திற்குப் பிறகு, லொறியில் தீ பற்றியதோடு, நெடுஞ்சாலையில் பல்வேறு இடங்களில் நொறுங்கிய பொருள்கள் பறந்தன.

உயிரிழந்த நபரின் பெயர் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

விபத்திற்கான காரணங்களைப் பற்றிய பொலிஸ் விசாரணை தொடருகிறது.



# அமெரிக்காவுக்கு இனி சுற்றுலா செல்வதில்லை

## கனேடிய மக்கள் முடிவு

கனேடிய மக்கள் இனி அமெரிக்காவுக்கு சுற்றுலா செல்வதில்லை என முடிவு செய்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கனடா மீது வரிகள் விதிக்கப்போவதாக மிரட்டியதைத் தொடர்ந்து, கனேடியர்கள் அமெரிக்காவைத் தவிர்த்து கனடாவுக்குள்ளேயே பல்வேறு சுற்றுலாத்தலங்களை பார்வையிடுவதில் கவனம் செலுத்துமாறு முன்னாள் பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதைதொடர்ந்து பெப்ரவரியில் அமெரிக்கா சென்று திரும்பிய கனேடியர்களின் எண்ணிக்கை, முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது 23 சதவிகிதம் குறைந்துள்ளதாக கனடாவின் புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

ட்ரம்பின் வரிவிதிப்பு அச்சுறுத்தல்களைவிட, கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக அவர் மிரட்டிவருவதுதான் தங்களுக்கு கோபத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக கனேடிய மக்கள் தெரிவித்துள்ளனர்.

சமீக காலமாக அமெரிக்காவுக்கு சுற்றுலா செல்வர்களும், கிரீன் கார்டு வைத்திருப்பவர்களும் கூட கைது செய்யப்பட்டு நீண்ட நாட்களுக்கு சிறையில் அடைக்கப்படுவதாக வெளியாகிவரும் செய்திகள் அமெரிக்காவுக்கு சுற்றுலா செல்லும் எண்ணத்தை தவிர்க்க கனேடியர்களைத் தூண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2024ஆம் ஆண்டில் மட்டுமே சுமார் 20.2 மில்லியன் முறை கனேடியர்கள் அமெரிக்காவுக்கு சுற்றுலா சென்றுள்ளனர்.

இந்நிலையில், அவர்களில் 10 சதவிகிதம் பேர் அமெரிக்கா செல்வதைத் தவிர்த்தாலே, அமெரிக்காவுக்கு சுமார் 2 பில்லியன் டொலர்கள் இழப்பும், 14,000 பேர் வேலையிழக்கும் நிலையும் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

